Crl.Misc.39

D E P O S I T I O N O F W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC 207/2015

**P.W**.1

| | |
|---|---|
| Name | : **திரு.சகாதேவன்** |
| Father/Husband Name | : திரு.பஞ்சநாதன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.08.2023

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வடலூர் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த வனத்தையன் என் அண்ணன் மருமகன் ஆவார்.

2) கடந்த 2015ம் வருடம் ஒரு நாள் வாழைத்தார் ஏற்றிக் கொண்டு மினி டாரஸ் வண்டியில் நானும், வனத்தையனும் சென்றுக் கொண்டிருந்தோம். நான் ஓட்டுனருக்கு அருகே உட்கார்ந்திருந்தேன். வனத்தையன் வாழைத்தார்கள் மீது படுத்துக் கொண்டிருந்தார். கல்பாக்கம் பெட்ரோல் பங்க் அருகே வந்த போது ஓட்டுனர் வாகனத்தை சென்டர் மிடியனில் மோதி விபத்து ஏற்பட்டு வண்டி தலை கீழாக கவிழ்ந்துவிட்டது. அதில் வனத்தையன் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். அவரை மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றோம். இது குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

**(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

புகார் மனுவை யார் எழுதினது என்றால் வேறு ஒருவர் நான் சொன்னதை எழுதினார். புகார் கொடுக்கும் போது நான் மட்டும் தான் இருந்தேன். விபத்து நடந்த நேரம் இரவு 2.15 மணி இருக்கும். போலிசார் என்னை விபத்து குறித்து விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. நான் சம்பவத்தின் போது தூங்கிக் கொண்டு வந்தேன் என்றாலும் சத்தம் கேட்ட பிறகு தான் என்ன நடந்தது என்று பார்த்தேன் என்றாலும் சரியல்ல. விபத்தில் இறந்தவர் என்னுடைய உறவினர் என்பதால் நான் இவ்வழக்கிற்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the Witness in the presence of the accused and admitted by the Witness to be correct.

(Sd) A.Kadhiravan,
J.M/TKM.

Crl.Misc.39

D E P O S I T I O N O F W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC 207/2015

**P.W**.2

| | |
|---|---|
| Name | : திரு.பெலிக்ஸ் ரொசாரியோ |
| Father/Husband Name | : திரு.வனத்தையன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.08.2023

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வழுதலம்பட்டு கிராமத்தில் குடியிருந்து ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த வனத்தையன் என் தந்தை ஆவார்.

2) கடந்த 06.08.2015 அன்று வாழைத்தார் ஏற்றிக் கொண்டு ஈச்சர் வாகனத்தில் என் தந்தை வனத்தையனும், என் தாத்தா சகாதேவனும் சென்றுக் கொண்டிருந்த போது பூந்தண்டலம் வாசுதேவன் பெட்ரோல் பங்க் அருகே வந்த போது வண்டி சென்டர் மிடியனில் மோதி விபத்து ஏற்பட்டு வண்டி தலை கீழாக கவிழ்ந்துவிட்டது. அதில் என் தந்தை வனத்தையன் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். இது குறித்து என் தாத்தா சகாதேவன் எனக்கு தொலைபேசியில் தகவல் சொன்னதன் பேரில் நான் மருத்துவமனை சென்று பார்த்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

**விபத்து குறித்து எனக்கு நேரிடையாக தெரியாது. என் தாத்தா சொல்லிதான் விபரம் தெரியும் என்றால் சரிதான்.**

Taken down by me in open Court read over in the Witness in the presence of the accused and admitted by the Witness to be correct.

(Sd) A.Kadhiravan,
J.M/TKM.

Crl.Misc.39

D E P O S I T I O N  O F  W I T N E S S

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC 207/2015

**P.W**.3

| | |
|---|---|
| Name | : திரு.விமல்ராஜ் |
| Father/Husband Name | : திரு.ஜபஸ்டின் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.08.2023

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வடலூர் கிராமத்தில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த வனத்தையன் என் மாமா ஆவார்.

2) கடந்த 06.08.2015 அன்று வாழைத்தார் ஏற்றிக் கொண்டு ஈச்சர் வாகனத்தில் என் மாமா வனத்தையனும், என் தாத்தா சகாதேவனும் சென்றுக் கொண்டிருந்த போது பூந்தண்டலம் வாசுதேவன் பெட்ரோல் பங்க் அருகே வந்த போது வண்டி சென்டர் மிடியனில் மோதி விபத்து ஏற்பட்டு வண்டி தலை கீழாக கவிழ்ந்துவிட்டது. அதில் என் தந்தை வனத்தையன் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். இது குறித்து என் தாத்தா சகாதேவன் எனக்கு தொலைபேசியில் தகவல் சொன்னதன் பேரில் நான் மருத்துவமனை சென்று பார்த்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

**விபத்து குறித்து எனக்கு நேரிடையாக தெரியாது. என் தாத்தா சொல்லிதான் விபரம் தெரியும் என்றால் சரிதான்.**

Taken down by me in open Court read over in the Witness in the presence of the accused and admitted by the Witness to be correct.

(Sd) A.Kadhiravan,
J.M/TKM.